# ‘கோவிட்-19’ தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டதற்கான பதிவைப் பெறுதல்

NSW GOVERNMENT

## ‘கோவிட்-19’ தடுப்பூசியை நீங்கள் பெற்றுக்கொண்டதற்கான பதிவை எவ்வாறு பெறுவது

நீங்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னர், உங்கள் கோவிட்-19 தடுப்பூசியின் சான்றானது, **உங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையில் (immunisation history statement)** பதிவு செய்யப்படும்.

தேவையான அனைத்து மருந்தளவுகளையும் (டோஸ்களையும்) நீங்கள் பெற்றவுடன், உங்கள் **கோவிட்-19 இலத்திரனியல் சான்றிதழையும் (COVID-19 digital certificate)** உங்களால் அணுக இயலும்.

நீங்கள் ‘கோவிட்-19’ தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டதன் சான்றை பின்வருபவை மூலம் பெறலாம்:

- **மெடிக்கேர் இணைய-வழி (ஆன்லைன்) கணக்கு (Medicare online account)**
- **‘எக்ஸ்பிரஸ் பிளஸ்’ மெடிக்கேர் செயலி  (Express Plus Medicare app)**
- **‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’ (எனது சுகாதாரப் பதிவு - My Health Record)**
- **தனிநபர் சுகாதார அடையாளங்காட்டிகள் சேவை (Individual Healthcare Identifiers Service)**
- **ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேடு (Australian Immunisation Register)**




## இணைய-வழி (ஆன்லைன்) ‘மெடிக்கேர்’ கணக்கு (Medicare online account)

1. உங்களது **myGov** கணக்கினுள் நுழைந்து (my.gov.au), **Medicare-**ஐத் தெரிவு செய்யவும்
2. **Immunisation history** எனும் பிரிவிலிருந்து, **View immunisation history** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
3. உங்கள் பெயரைத் தெரிவு செய்யவும்
4. **View immunisation history statement (PDF)** அல்லது **COVID-19 digital certificate (PDF)** என்பதைச் சொடுக்கவும் (கிளிக் செய்யவும்)

## ‘எக்ஸ்பிரஸ் பிளஸ்’ மெடிக்கேர் செயலி (Express Plus Medicare app)

1. செயலியைத் திறந்து உள்நுழையவும் (sign in)
2. **Services** எனும் பிரிவிலிருந்து, **Immunisation history** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
3. உங்கள் பெயரைத் தெரிவு செய்யவும்
4. **View immunisation history statement (PDF) அல்லது COVID-19 digital certificate (PDF)** என்பதைச் சொடுக்கவும் (கிளிக் செய்யவும்)

## ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’ (எனது சுகாதாரப் பதிவு - My Health Record)

நீங்கள் கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதற்கான சான்றை, ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’ (My Health Record)-இல் இருந்தும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களிடம் ஏற்கனவே ஒரு ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’ கணக்கு இருக்கிறது என்றால்:

1. உங்களது **myGov** கணக்கினுள் நுழைந்து (my.gov.au), **My Health Record-**ஐத் தெரிவு செய்யவும்
2. உங்களுடைய ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’-ஐத் திறக்கவும்
3. நீங்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதன் சான்றினை, உங்களது **Record Home** எனும் பக்கத்திலிருந்தோ அல்லது **Immunisations view** எனும் பக்கத்திலிருந்தோ அணுகவும் **(Documents, Immunisations** என்பவற்றைத் தேர்ந்தெடுக்கவும்)

உங்களிடம் ஏற்கனவே ஒரு ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’ கணக்கு இல்லையென்றால், இருப்பினும் உங்களிடம் ஒரு மெடிக்கேர் அட்டை இருக்கிறது என்றால்:

1. உங்களது **myGov** கணக்கினுள் நுழைந்து (my.gov.au), **My Health Record-**ஐத் தெரிவு செய்யவும்
2. உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி, ஒரு ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’ கணக்கை உருவாக்கவும். நோய்த்தடுப்புத் தகவலை (மெடிக்கேர் தகவலை) உங்கள் ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’-இல் சேர்த்துக்கொள்வதற்கு, ‘ஆம்’ என்பதைத் தேர்ந்தெடுத்துப்பதை உறுதி செய்யவும்
3. உங்கள் ‘மை ஹெல்த் ரெக்கோர்ட்’ கணக்கைத் திறக்கவும்
4. நீங்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதன் சான்றினை, உங்களது **Record Home** எனும் பக்கத்திலிருந்தோ அல்லது **Immunisations view** எனும் பக்கத்திலிருந்தோ அணுகவும்

# ‘கோவிட்-19’ தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டதற்கான பதிவைப் பெறுதல்

## தனிநபர் சுகாதார அடையாளங்காட்டிகள் சேவை (Individual Healthcare Identifiers Service) (உங்களிடம் ஒரு மெடிக்கேர் அட்டை இல்லை என்றால்)

உங்களிடம் ஒரு மெடிக்கேர் அட்டை இல்லையென்றால், அத்துடன் நீங்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதன் சான்றினை இணைய-வழியில் (ஆன்லைனில்) அணுக விரும்பினால், உங்களுக்கு ஒரு தனிநபர் சுகாதார அடையாளங்காட்டி (Individual Healthcare Identifiers Service - IHI) தேவைப்படும். உங்களிடம் ஏற்கனவே ஒரு IHI இல்லையென்றால், நீங்கள் இணைய-வழியில் (ஆன்லைனில்) அதற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிகத் தகவலுக்கு பின்வரும் இணைப்பைப் பார்க்கவும்:

https://www.servicesaustralia.gov.au/individuals/services/medicare/individual-healthcare-identifiers/how-get-ihi

உங்களுக்கு ஒரு IHI கிடைத்தவுடன், நீங்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதன் சான்றை myGov மூலம் அணுகலாம்.

1. உங்களது **myGov** கணக்கினுள் நுழைந்து (my.gov.au), **Individual Healthcare Identifiers service** -ஐத் தெரிவு செய்யவும்
2. **Services** எனும் பிரிவிலிருந்து, **Immunisation history** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
3. **View immunisation history statement (PDF)** அல்லது **COVID-19 digital certificate (PDF)** என்பதைச் சொடுக்கவும் (கிளிக் செய்யவும்)

## ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேடு (Australian Immunisation Register)

நீங்கள் கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதன் சான்றை, இணைய-வழி (ஆன்லைன்) மூலமாகப் பெற முடியாவிட்டால்,

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணிக்குள் **ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டினரை (Australian Immunisation Register) 1800 653 809** என்ற எண்ணில் அழைக்கவும்.

உங்கள் **நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை (immunisation history statement)** உங்களுக்கு அனுப்பிவைக்குமாறு அவர்களிடம் கேளுங்கள்.

இது அஞ்சல் மூலம் வந்துசேர 14 நாட்கள் வரை ஆகலாம்.

உங்களுக்கு மொழிபெயர்ந்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், தயவுசெய்து **தொலைபேசி மொழி பெயர்ந்துரைப்பு சேவைக்கு (TIS) 131 450** என்ற எண்ணூடாக அழைப்புவிடுக்கவும்.

## பயனுள்ள இணைப்புகள்

உங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை எவ்வாறு அணுகுவது என்பது பற்றிய மேலதிகத் தகவலுக்கு, கீழே உள்ள **QR குறியீட்டை ஊடுகதிர்ப்படம் (ஸ்கேன்) எடுக்கவும்**

நியூ சவுத் வேல்ஸ்-இல் உள்ள கோவிட்-19 தடுப்பூசித் திட்டம் பற்றி மேலும் அறிய, கீழே உள்ள **QR குறியீட்டை ஊடுகதிர்ப்படம் (ஸ்கேன்) எடுக்கவும்**

நீங்கள் கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதற்கான சான்றினை, இணைய-வழியில் (ஆன்லைனில்) பெறுவதற்குரிய எளிதான வழியைக் கண்டறிய, கீழே உள்ள **QR குறியீட்டை ஊடுகதிர்ப்படம் (ஸ்கேன்) எடுக்கவும்**

மேலதிகத் தகவலுக்கு **nsw.gov.au**-ஐப் பார்வையிடவும்.

August 2021 © NSW Health.

Translated by WSLHD Translation Service, 1 September 2021. TAMIL

NSW GOVERNMENT